**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 2 /2020**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. செல்வராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. திம்மைய கவுண்டர்** | **Calling** | : | |
| **Village** | : | **கெண்டிச்சம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **64** |
| | | | **Dated** | : | **13.02.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A3, A6, A7 present. A1, A2, A5 absent, petition filed and allowed. A4 died (CA). Both side counsels present.**

**பட்டியல் சாட்சி 4 திரு. செல்வராஜ் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜராகதர்களை பொறுத்த வரையில் பெயர் தெரியாது, நேரில் பார்த்தால் சொல்ல முடியும். அசா. 1, 2, 3 ஆகியோரை தெரியும். நாகராஜ் (அசா. 3) என்பவர் 1–வது எதிரிக்கு பணம் கொடுத்து கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக அவருக்குள் தகராறு வந்ததாக சொல்லி காவல் நிலையத்தில் இருந்தனர். எல்லோரும் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் நான் காவல்நிலையத்திற்குள் சென்றேன். விசாரணை மறுநாள் செய்வதாக சொன்னதால் நாங்கள் வீட்டிற்கு சென்று கொண்டு இருந்தோம். கேத்தம்பட்டி அருகே இயற்கை

உபாதைக்காக சென்று கொண்டு இருந்தோம். அப்போது சத்தம் கேட்டது. எனக்கு பின்னால் இருந்தவர்கள் சத்தம் கேட்டு திரும்பி போய் கொண்டு இந்தார்கள். நாங்கள் சென்று பார்த்த போது பால்பாண்டிக்கு பின்னந்தலையில் இரத்த காயம் ஏற்பட்டு இருந்தது. அவர் 1–வது எதிரி தன்னை தாக்கியதாக சொல்லிக் கொண்டு இருந்தார். பேசிக்கொண்டு இருக்கும்போதே அந்த வழியாக வந்த வெங்காய வண்டியில் ஏற்றி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு வந்து விட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

போலீசார் விசாரணையில் கடந்த 11.11.2013 ம் தேதி நான் திருமைய கவுண்டன்பட்டிக்கு வந்த நாகராஜை பார்த்துவிட்டு, சொந்த வேலை விசயமாக எங்கள் ஊர் சுப்பிரமணி, குரும்பட்டி முருக கிருஷ்ணன் மற்றும் நாகராஜ், பால்பாண்டி, ஜெயச்சந்திரன் மற்றும் சிலர் செம்பட்டிக்கு வந்து மதியம் 02.00 மணி போல செம்பட்டி பெட்ரோல் பங்க் அருகில் உள்ள வேலுநாயக்கர் ஓட்டலுக்கு சாப்பிட சென்றபோது அந்த ஓட்டலில் இருந்த சுப்பன் மகன் முருகன் (A1) நாகராஜை பார்த்து ஏண்டா கடன் கொடுத்தா, கண்ட இடத்தில் எல்லாம் கேட்பாயா, உனக்கு பணம் எதுவும் தர முடியாது. இனிமேல் பணம் கேட்டு வரக்கூடாது என அசிங்கமாக பேசி இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டு, அவர்கள் இருவரையும் விலக்கி விட்டோம் என்றும், அதன் பேரில் அவர்கள் இருவரும் காவல் நிலையம் சென்று

தனித்தனியாக சென்று புகார் கொடுத்தார்கள் என்றும், மறுநாள் விசாரணைக்கு வரச்சொல்லவே நாங்கள் முன்னே போக கொஞ்ச நேரம் கழித்து பால்பாண்டி வந்தார் என்றும், இரவு 09.30 மணிக்கு பால்பாண்டியை கோத்தையக் கவுண்டன்பட்டி அருகே வரும்போது அங்கு தயாராக இருந்த A1, A2, A6, A7, A3, A4, A5 ஆகியோர் பால்பாண்டியை வழிமறித்து கோத்தா உங்கம்மா என்று அசிங்கமாக பேசி அவர்கள் வைத்து இருந்த கடப்பாரை கம்பி மற்றும் குச்சியால் முருகனும், பழனிச்சாமியும் பிடித்து கொள்ள வெங்கடேசன் மற்றும் பெருமாள், நவநீதன் ஆகியோர் பால்பாண்டியை பார்த்து எல்லா பிரச்சனைக்கும் இவன் தாண்டா காரணம், இவனை உயிரோடு விடக்கூடாது என்று சொல்லி, இத்தோடு செத்துப்போடா என்று சொல்லி கடப்பாரையால் பால்பாண்டியில் தலையில் அடித்து பலத்த இரத்த காயத்தை ஏற்படுத்தியும், உடம்பில் பல இடங்களில் மாறி மாறி அடித்து ஊமைக்காயங்களை ஏற்படுத்தியும், பால்பாண்டியில் அலறல் சத்தம் கேட்டு அருகே சென்றபோது அவர்கள் ஓடிவிட்டார்கள் என போலீசார் விசாரணையில் சொல்விட்டு தற்போது இருதரப்பினரும் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.02.14 10:41:17 +0530